(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 1(4).]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மார்ச் 03 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2023 மார்ச் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1538/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காய்கறிகள் மற்றும் பழவகைகளின் வருடாந்த உற்பத்தியானது தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி உற்பத்தியில் போக்குவரத்தின்போது சேதமடையும் காய்கறிகள் மற்றும் பழவகைகளின் அளவானது தனித்தனியே யாதென்பதையும்;

(iii) போக்குவரத்தின்போது காய்கறிகள் மற்றும் பழவகைகளுக்கு ஏற்படும் சேதத்தினைத் தடுப்பதற்காக முறையான வழிமுறையொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1574/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்களும் அதன் பணிகளும் மேற்படி நிறுவகத்தினால் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மேற்படி நிறுவகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிறுவகத்தினால் வெளியிடப்படுகின்ற அறிக்கைகளை கவனத்தில் கொண்டு விவசாயத்துறைக்கு ஏற்புடைய எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றனவா என்பதையும்;

(iii) விவசாயத் துறைக்கான எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்கு மேற்படி நிறுவகத்தினால் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1614/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகரில், பாதகமான வாயுக்களின் உள்ளடக்கம் அங்கீகரிக்கப்பட்ட செறிவு மட்டத்தை விடவும் உயர்வான பெறுமானத்தைக் கொண்டிருப்பதாக ஆய்வறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதனுடன் தொடர்புடையதாக 2017ஆம் ஆண்டு, உரிய சகல தரப்பினர்களினதும் பங்குபற்றுதலுடன் காற்று வளங்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(iii) பின்னர் அந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்நிகழ்ச்சித் திட்டங்களை மீளவும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1629/2023

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அன்னாசிச் செய்கையாளர்களில் அதிகமானோர் கம்பஹா மாவட்டத்தில் உள்ளனர் என்பதையும்;

(ii) அன்னாசி ஏற்றுமதி மூலம் குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி ஈட்டப்படுகிறது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் விளையும் அன்னாசிக்கு சர்வதேசச் சந்தையில் கிடைத்துள்ள இடம் யாது என்பதையும்;

(ii) அன்னாசிச் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) அன்னாசிச் செய்கையை விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1631/2023

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகளுள் பெருமளவான காணிகள் அனுமதியின்றி கையகப்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறு அனுமதியின்றி கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டேர்களில் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி காணிகளை, மீளவும் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் உடமையாக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1633/2023

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் 100,000 கி.மீ. வீதிகளை காப்பற் இடும் திட்டத்தின் கீழ் இதுவரை காப்பற் இடப்பட்டுள்ள வீதிகளின் நீளம்;

(ii) மேற்படி திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிகளின் நீளம்;

(iii) அவற்றில் இதுவரை பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம்;

கிலோமீற்றர்களில் எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொடக்கவெல பிரதேச செயலகப் பிரிவில், கொடக்கவெல முதல் பிபிலேகம வரையான வீதியில் 5 கிலோமீற்றர்களை காப்பற் இட்டு அபிவிருத்தி செய்யும் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக மேற்படி பிரதேச மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1634/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

(iii) புதிதாக பதிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பித்துள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை;

யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் வருடாந்தம் கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனவா;

(ii) இன்றேல், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1673/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசித்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியே பிற இடங்களிலும் தங்கியுள்ளார்கள் என்பதையும்;

(ii) தற்போது போர் நிறைவடைந்துள்ள போதிலும், மேற்படி குழுவைச் சேர்ந்த சுமார் 100,000 பேருக்கு இலங்கைக்கு மீண்டும் வருகைதர இயலாதுள்ளதென்பதையும்;

(iii) அம்மக்களில் முகாம்களுக்கு வெளியே பிற இடங்களில் தங்கியுள்ள பலர், இந்திய அரசாங்கத்தால் வீசா வழங்கப்படாததால் இலங்கைக்குத் திரும்பும் போது, இவர்கள் இந்தியாவில் தங்கியிருந்த முழுக் காலத்திற்குமான வீசா கட்டணத்தைச் செலுத்த நேரிட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மக்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1754/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற பிளாஸ்டிக் தும்புத்தடிகள், பிளாஸ்டிக் விளக்குமாறுகள் மற்றும் துப்புரவுச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தூரிகைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) அவற்றை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தும்பு சார்ந்த பொருட்களின் பாவனையை ஊக்குவிப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) தும்பு சார்ந்த பொருட்களுக்கான பதிலீட்டுப் பொருட்களின் இறக்குமதியை அதைரியப்படுத்துவதற்கு கொள்கைரீதியான தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1796/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தர் ஒருவரை தெரிவு செய்வதற்காக 2020 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தனவா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் பெயர் மற்றும் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விண்ணப்பதாரிகளில் தகுதியுடைய ஒருவரை தெரிவு செய்வதற்கு மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அந்த மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மதிப்பீட்டுக் குழு அமர்வுகள் நடாத்தப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி மதிப்பீட்டுக் குழுவினால் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் அளிக்கப்பட்ட புள்ளிகள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பதவிக்கு தகுதியான ஒருவரை தெரிவு செய்யும் பொருட்டு விசேட மூதவைக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கூட்டமும் நடாத்தப்பட்ட திகதி மற்றும் அதில் பங்கேற்ற அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி மூதவையினால் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் அளிக்கப்பட்ட புள்ளிகள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 31 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 31

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 21302 “வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 4,600,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 1,600,000,000 இலிருந்து ரூபா. 16,000,000,000 வரை |

(இக்கட்டளை 2022.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2023.02.28 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 32 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 32

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 22302 “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடிபொருட்கள்) - இலங்கை கடற்படை” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 550,000,000 இலிருந்து ரூபா. 700,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2022.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2023.02.28 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 33 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 33

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 28502 “விவசாயப் பண்ணை பராமரிப்பு விதைகள், விற்பனை - கமத்தொழில் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 660,000,000 இலிருந்து ரூபா. 850,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 660,000,000 இலிருந்து ரூபா. 850,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2022.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2023.02.28 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 34 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 34

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 30602 "புகையிரதக் களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு - இலங்கைப் புகையிரதத் திணைக்களம்" இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 2,000,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 8,200,000,000 இலிருந்து ரூபா. 9,000,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2022.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2023.02.28 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 35 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 35

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31003 "அரசாங்க தொழிற்சாலை பணிவு நிறைவு முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம்" இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 400,000,000 இலிருந்து ரூபா. 410,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 390,000,000 இலிருந்து ரூபா. 350,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2022.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2023.02.28 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6 ),— 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளைகள் கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2022.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும். )

**அட்டவணை**

(இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

### அட்டவணை

### 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2022 ஆம் நிதியாண்டு தொடர்பில் 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 8 ன் கீழ் நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்கள் பற்றிய அட்டவணை.

### குழுத்தொடர் இலக்கம். 01

2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00201, 10501, 11101, 11801, 11901, 12601, 13001, 14901, 18701, 18901, 22201, 22301, 22401, 22501, 23201, 23501, 24201, 24901, 26001, 26501, 26901, 27701, 28101, 28801, 29301, 30601, 32001, 33101, 33401 மற்றும் 33601 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்:-

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | செலவின இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக்குறைந்த எல்லைகள் | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | பிரதம அமைச்சர் அலுவலகம் | 00201 | - | - | 12,000,000 | 11,000,000 | - | - | 1 |
| 2. | வெகுசன ஊடாக அமைச்சர் | 10501 | - | - | 5,100,000 | 4,500,000 | - | - | 2 |
| 3. | சுகாதார அமைச்சர் | 11101 | - | - | 1,422,500,000 | 1,199,000,000 | - | - | 3 |
| 4. | கமத்தொழில் அமைச்சர் | 11801 | - | - | 44,000,000 | 40,000,000 | - | - | 4 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் | 11901 | - | | 7,200,000 | 6,500,000 | | | 5 |
| 6. | கல்வி அமைச்சர் | 12601 | - | | 1,637,000,000 | 1,100,000,000 | | | 6 |
| 7. | பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் | 13001 | - | - | 732,000,000 | 555,000,000 | - | - | 7 |
| 8. | கைத்தொழில் அமைச்சர் | 14901 | - | - | 36,200,000 | 20,000,000 | - | - | 8 |
| 9. | முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் | 18701 | 1,500,000 | 33,000,000 | - | - | 2,000,000 | 22,500,000 | 9 |
| 10. | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் | 18901 | - | - | 72,550,000 | 52,000,000 | - | - | 10 |
| 11. | இலங்கைத் தரைப்படை | 22201 | - | - | 3,000,000,000 | 2,100,000,000 | - | - | 11 |
| 12. | இலங்கை கடற்படை | 22301 | - | - | 400,000,000 | 330,000,000 | - | - | 12 |
| 13. | இலங்கை வான்படை | 22401 | - | - | 320,000,000 | 310,000,000 | - | - | 13 |
| 14. | பொலிஸ் திணைக்களம் | 22501 | - | - | 1,000,000,000 | 800,000,000 | - | - | 14 |
| 15. | சிறைச்சாலைகள் திணைக்களம் | 23201 | - | - | 130,000,000 | 110,000,000 | - | - | 15 |
| 16. | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 23501 | - | - | 700,000 | 600,000 | - | - | 16 |
| 17. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் | 24201 | - | - | 4,000,000 | 3,250,000 | - | - | 17 |
| 18. | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | 24901 | - | - | 6,000,000 | 5,500,000 | - | - | 18 |
| 19. | மாவட்டச் செயலகம், நுவரெலியா | 26001 | - | - | 35,000,000 | 31,000,000 | - | - | 19 |
| 20. | மாவட்டச் செயலகம் / கச்சேரி, மன்னார் | 26501 | - | - | 12,000,000 | 11,000,000 | - | - | 20 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21. | மாவட்டச் செயலகம் / கச்சேரி, மட்டக்களப்பு | 26901 | - | - | - | - | 140,000,000 | 149,000,000 | 21 |
| 22. | மாவட்டச் செயலகம், மொணராகலை | 27701 | 35,000,000 | 35,395,000 | - | - | - | - | 22 |
| 23. | கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | - | - | 280,000,000 | 200,000,000 | - | - | 23 |
| 24. | இலங்கை நில அளவைத் திணைக்களம் | 28801 | - | - | 130,000,000 | 126,000,000 | - | - | 24 |
| 25. | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 29301 | - | - | 18,000,000 | 16,500,000 | - | - | 25 |
| 26. | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் | 30601 | - | - | 450,000,000 | 420,000,000 | - | - | 26 |
| 27. | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 32001 | - | - | 480,000,000 | 360,000,000 | - | - | 27 |
| 28. | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | - | - | 280,000,000 | 198,000,000 | - | - | 28 |
| 29. | பல்செயற்பாட்டு அபிவிருத்திச் செயலணித் திணைக்களம் | 33401 | - | - | 16,000,000 | 12,000,000 | 50,000,000 | 60,000,000 | 29 |
| 30. | வணிகக் கப்பற்றுறைச் செயலகம் | 33601 | 2,000,000 | 2,200,000 | - | - | - | - | 30 |

2022.05.30 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

# 2023 மார்ச் 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. அர்ஜுன் மகேந்திரன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பணியாற்றிய காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) மேற் குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியில் பிணை முறி மோசடியொன்று இடம்பெற்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) மேற்படி பிணை முறி மோசடியுடன் திரு. அர்ஜுன் மகேந்திரன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதாக அது தொடர்பில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் குற்றஞ்சாட்டப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) திரு. அர்ஜுன் மகேந்திரனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமிப்பதற்கு விதப்புரை செய்த மற்றும் மேற்படி நியமனத்தை அங்கீகரித்த அரசியல் அதிகாரத் தரப்பு ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

380/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகள், கனிஷ்ட பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற் குறிப்பிட்ட ஒவ்வொரு பாடசாலை வகையிலும் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு மத்தியில் மேலதிக ஆசிரியர்களைக் கொண்டுள்ள மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகள் வெவ்வேறாக இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

418/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கான வருடாந்த பால் தேவையில் திரவப் பாலினால் பூர்த்தி செய்யப்படும் அளவானது சதவீதத்திலும் லீற்றர்களிலும் வெவ்வேறாக யாது;

(ii) திரவப் பாலுக்காக நிலையான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதா;

(iii) கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் திரவப் பாலின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) திரவப் பாலின் நுகர்வை உயர்த்துவதற்காக இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

474/2023

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தொழிற்படும் வாடகை வாகனங்கள் மற்றும் அது சார்ந்த சேவைகளை வழங்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை மேற்படி கம்பெனி ஒவ்வொன்றினாலும் ஈட்டப்பட்ட வருமானம், ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை ரூபாய் என்பதையும்;

(iii) மேற்கூறிய காலப்பகுதியில் அத்தகைய கம்பெனி ஒவ்வொன்றினாலும் செலுத்தப்பட்ட வரிப் பணம் ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை ரூபாய் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வாடகை வாகனகள் மற்றும் அது சார்ந்த சேவைகளை வழங்க வெளிநாட்டுக் கம்பெனிகள் இணைந்துள்ளதன் காரணமாக, இலங்கையில் அந்தச் சேவைகளை வழங்கும் நபர்களும் கம்பெனிகளும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இலங்கையில் தொழிற்படும் வாடகை வாகன சேவையை ஒழுங்குறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

686/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுமார் 1300 இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் களுவாஞ்சிக்குடி வர்த்தக மையத்தில்/சந்தையில் துப்பரவேற்பாட்டு வசதிகள் மற்றும் வடிகான் கட்டமைப்புகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லையென்பதையும்;

(ii) வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தேவையான நிரந்தரக் கட்டிடங்கள் இன்மையால் திறந்த வெளிகளில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மழை காலங்களில் வியாபாரிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(iii) இந்த இடத்தில் அமைந்துள்ள மீன்சந்தை தொழில்நுட்ப வசதிகளுடன்கூடியதாக புனரமைக்கப்படாமையால் மீன் வியாபாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(iv) அதன் வீதிகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக மையத்தை/சந்தையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

816/2023

கௌரவ ஜகத் குமார சுமத்திராரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022.05.09 ஆம் திகதி இலங்கையில் நடந்த கலவரச் சம்பவத்தின்போது, தமது கடமைகளைத் தவறவிட்டிருந்த பொலிசு அலுவலர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பதவி வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(ii) அந்த அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி திகதியிலும் அதனை அண்மித்த சில மாதங்களிலும், பிரதிப் பொலிசுப் பதிசோதகர் தலைமையதிபதி ஒருவர் உட்பட சில பொலிசு அலுவலர்களை பகிரங்கமாக துன்புறுத்தியும், கடமைகளுக்கு இடையூறு விளைவித்தும் ஆவேசத்துடன் செயற்பட்ட நபர்கள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இன்றளவில் அந்நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், இவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022.05.09ஆம் திகதி நடந்த கலவரச் சம்பவத்தின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தப் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1797/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புத்தல கைத்தொழில் பேட்டையின் தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நிதி உதவிகள் வழங்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) இந்த நிதி உதவிகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபர்/நிறுவனம் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நபர்/நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்ட அனைத்து தொழில்முயற்சியாளர்களும் இன்றளவில் தமது கைத்தொழில்களை ஆரம்பித்துள்ளனரா என்பதையும்;

(ii) இக்கைத்தொழில்களுக்கு மத்தியில் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(iii) 2022 முதலாம் காலாண்டில் இக்கைத்தொழில்கள் ஊடாக ஈட்டப்பட்டுள்ள அந்நியச் செலாவணி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1806/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— முதலீட்டு மேம்பாடு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக வலயங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் மேற்படி ஒவ்வொரு சுதந்திர வர்த்தக வலயத்திலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

(iv) வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமென்பதனால் மேற்குறிப்பிட்ட சுதந்திர வர்த்தக வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2012/2023

கௌரவ யதாமிணீ குணவர்தன,— நிர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி, வளவை மற்றும் கல்ஓயா போன்ற ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதனூடாக மேற்படி ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் வெள்ள நிலைமை கட்டுப்படுத்தப் பட்டதனால் கங்கைகளை அண்டியதாக வாழும் மக்களுக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் வருடாந்தம் ஏற்படும் பாதிப்பு குறைவடைந்துள்ளது என்பதையும்;

(ii) களனி கங்கையை சார்ந்ததாக பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டமொன்று இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெள்ள இழப்பீட்டு நடவடிக்கைகளுக்காக கடந்த 05 வருட காலப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதித்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படித் தொகையில் களனி கங்கையின் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதித்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த 05 வருட காலப்பகுதியில் வெள்ளம் காரணமாக பாதிப்பிற்குள்ளான நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவர்களுள் களனி கங்கையின் வெள்ளம் காரணமாக பாதிப்பிற்குள்ளான நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) களனி கங்கையின் வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித் தொகை போதுமானதா என்பதையும்;

(ii) களனி கங்கையை அண்டியதாக ஏற்படும் வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் கருத்திட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2526/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் பட்டதாரி பயிலுநர்களாக பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்ட பட்டதாரிகளில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் பாடசாலை விடுமுறை காலத்தில் மீண்டும் அரசாங்க நிறுவனங்களுக்கு அழைக்கப்படுகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்கள் பயிற்சியின் முடிவில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனரா இல்லாவிடின் அபிவிருத்தி அலுவலர்களாக நியமிக்கப்படுகின்றனரா என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பட்டதாரி பயிலுநர்கள் கடமையாற்றும் அடிப்படை;

(ii) இவர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்படும் திகதி;

யாதென்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2023 மார்ச் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

834/2023

கௌரவ பிரேம்நாத் சி.தொலவத்த,— பிரதம அமைச்சர் மற்றும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தற்போது காணப்படும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் எண்ணிக்கை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களில், தனியார் கட்டிடங்களில் தமது அமைச்சு அலுவலகங்களைப் பேணி வரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) மேற்படி ஒவ்வொரு அலுவலகத்திற்கும் செலுத்தப்படும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படும் அமைச்சு அலுவலகங்களை அரசாங்கக் கட்டிடங்களுக்கு கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

849/2023

கௌரவ காமினி வலேபொட,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நூலாசிரியர்களின் அனுமதியின்றி இலாபம் ஈட்டும் நோக்கத்துடன், அச்சிடப்பட்ட நூல்களை பீ.டி.எப் (pdf) ஆக மாற்றியமைத்து விநியோகிப்பதன் காரணமாக மேற்படி நூலாசிரியர்கள் பாரிய அநீதிக்கு ஆளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காகவும் பாதிக்கப்பட்ட நூலாசிரியர்களுக்கு நியாயத்தை நிறைவேற்றுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அச்சிடப்பட்ட பிரதிகள் இல்லாத நூல்களை பீ.டி.எப் (pdf) ஆக மாற்றியமைத்து பேணிப் பாதுகாப்பது முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

860/2023

கௌரவ ரஊப் ஹகீம், சட்டத்தரணி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கோவிட்-19 நோயுடன் தொடர்புடையதாக —

(i) ஆய்வுகூடத்தினால் உறுதி செய்யப்பட்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) உறுதி செய்யப்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) மரணித்தவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான மரணங்களின் எண்ணிக்கை விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(ஆ) 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கோவிட்-19 மரணங்களுடன் தொடர்புடையதாக —

(i) சடலங்களை அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட முறை/கள்;

(ii) தகனக்கிரியை மேற்கொள்ளப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iv) தகனக்கிரியை மற்றும் அடக்கம் செய்யப்பட்டவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

865/2023

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன, கடனுதவிச் சங்கத்தில் தற்சமயம் கடமையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி சங்கத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியே எத்தனை என்பதையும்;

(iii) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் அடிப்படையில் மேற்படி சங்கத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கும் பதவியுயர்வுகளை வழங்குவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1299/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவரின் பெயர் யாதென்பதையும்;

(ii) அவருக்குச் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் யாவை என்பதையும்;

(iii) எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சிறப்புச் சலுகைகள் வரையறுக்கப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1304/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஒவ்வொரு மகாவலி வலயத்திலும் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களில் தங்களது காணிகளுக்கான உரித்து உறுதிகள் கிடைத்துள்ள மற்றும் கிடைக்காமலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) உரித்து உறுதிகள் கிடைக்காதுள்ள குடும்பங்களுக்கு உரித்து உறுதிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1311/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி பல்நோக்கு திட்டத்திற்குரிய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தின் மொத்த அளவு எத்தனை மெகாவாட் என்பதையும்;

(ii) மேற்படி அளவானது, இலங்கையின் மொத்த மின் உற்பத்தியில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) மகாவலி பல்நோக்கு திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1317/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு முதல் இது வரை இடம்பெற்றுள்ள விவாகரத்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) காதி நீதிமன்றங்களில் கடமையாற்றும் 60 வயதைத் தாண்டிய காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) பட்டம் பெற்றுள்ள காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) காதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1322/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் அரச நிறுவனங்களுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்குறிப்பிட்ட பதவியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடங்கள் நிலவுகின்றமையானது மாத்தளை மாவட்டத்தின் நிர்மாணப் பணிகளின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1328/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை மேற்படி கிளைகளினால் ரூ.5 மில்லியனுக்கு அதிகமாக கடன் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள் மற்றும் நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) குறிப்பிட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில் தற்போது அறவிட முடியாதுள்ள கடன் தொகையின் அளவு யாது;

(iv) குறிப்பிட்ட கடன் தொகையினை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்படும் கடன் தொகையில் அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டுள்ள கடன் தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 மார்ச் 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1458/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் டின் மீன்களின் அளவு எத்தனை தொன்கள் என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் நன்னீர் மீன்களை டின்களில் அடைக்கும் கைத்தொழிலை மேற்கொள்வதற்கு தனியார் துறையைச் சார்ந்த தொழில்முயற்சியாளர்கள் முன்வந்துள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், நன்னீர் மீன்களை டின்களில் அடைப்பதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1504/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பிரம்பு, மூங்கில் மற்றும் பனையோலை சார்ந்த பொருட்களின் உற்பத்திக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1539/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீட்டுப் பணிப்பெண்களாக வருடாந்தம் வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) இவ்வாறு வெளிநாடு செல்லும்போது சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி சேவை ஒப்பந்தத்தின் செல்லுபடிக் காலம் யாதென்பதையும்;

(iv) மேற்படி வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் பின்னாய்வு மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1575/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை, பூநகரி, சியம்பலாண்டுவை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் சூரியசக்தி பூங்காக்கள் இன்றளவில் அமைக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவிலிருந்தும் தேசிய மின்சக்தி முறைமைக்கு வழங்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை மெகாவாட்களில் வெவ்வேறாக யாது;

(iii) மேற்குறிப்பிட்ட சூரியசக்தி பூங்காக்கள் இன்றளவில் நடைமுறைப்படுத்தப் படவில்லையெனில், அவ் ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவினதும் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவினதும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1616/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996ஆம் ஆண்டு 947/13ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள முத்துராஜவல சரணாலயத்தின் எல்லைகள் இதுவரையிலும் அடையாளமிடப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குள் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளின் அளவினை தனித்தனியே இனங்காண்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவானது ஹெக்டேர்களில் தனித் தனியே யாதென்பதையும்;

(ii) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள காணிகளின் அளவுகளுக்கு இடையில் வேறுபாடு காணப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1630/2023

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்காலத்தில் ஆசிரியர் தொழிலுக்கு பட்டதாரிகளை மாத்தரம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் போது அவர்களின் ஆங்கில மொழி அறிவு, விளையாட்டுத் திறமைகள் மற்றும் அழகியற்கலை ஆற்றல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொழில்சார் அடிப்படைக் கல்வி முறையொன்றுக்காக பாடத்திட்டங்களைத் திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி கல்வியை வழங்குவதன் பொருட்டு தொழில்பயிற்சி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) கல்வி மறுசீரமைப்புகள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை ஆராய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1632/2023

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மண்சரிவு காரணமாக மலைநாட்டுப் புகையிரதப் பாதைகளில் புகையிரதப் போக்குவரத்துக்கு நிதமும் இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதையும்;

(ii) அதனால் ஏற்படுகின்ற தாமதங்கள் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டுப் பயணிகள் ஆகிய இரு தரப்பினரும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி புகையிரதப் பாதைகளை புனரமைப்பதற்காக இராணுவச் சிப்பாய்களையும் புகையிரத ஊழியர்களையும் ஈடுபடுத்துவது செயற்றிறனற்றது என்பதையும்;

(iv) உலகின் ஏனைய நாடுகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் அறிவினைப் பயன்படுத்தி புகையிரதப் பாதைகளில் மண்ணை அகற்றுவதற்கான பெக்கோ இயந்திரமொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1635/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் 2022.06.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பப்பட்டுள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் அனுப்பப்பட்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்பப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) தற்போது இலங்கைக்குக் கிடைத்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு கோட்டா ஒவ்வொரு நாட்டின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(v) வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள இலங்கையர்களுக்காக இயங்கிவருகின்ற மொழிப் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1674/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் வைத்தியசாலை 2018 ஆம் ஆண்டு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட போதிலும், மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகள் இற்றைவரை வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) மருத்துவர்கள் உட்பட மேற்படி மருத்துவமனைக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் பிரேத அறை இன்மையால் சடலங்களை மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், முருங்கன் வைத்தியசாலைக்கு பிரேத அறையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) முருங்கன் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1755/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?